மீட்டர் பேசுது

சென்னை	வேலூர்	திருச்சி	மதுரை	கோவை
38.7°C	41.1°C	39.9°C	38.7°C	35.4°C
சேலம்	**நெல்லை**	**உதகை**	**கொடைக்கானல்**	
37.6°C	37.3°C	21.4°C	21.0°C	

தமிழநாடு, புதுச்சேரியின் ஒருசில இடங்களில் மழை பெய்யக்கூடும். சென்னையில் ஓரளவு மேகமூட்டம் காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். வெப்பநிலை 30 முதல் 39 டிகிரி செல்சியஸ் வரை இருக்கக்கூடும்.

சிதம்பரம் நடராஜர் கோயிலை

இந்து சமய அறநிலையத்துறை ஏற்கும் திட்டம் இல்லை

● மயிலாடுதுறையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

■ மயிலாடுதுறை

சிதம்பரம் நடராஜர் கோயிலை அற நிலையத்துறை ஏற்றுக் கொள்ளும் திட்டம் எதுவும் இல்லை என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு தெரிவித்தார்.

மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனத்தில் விருந்தினர் மாளிகை திறப்பு விழா மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலை வகித்தார்.

விழாவில், தமிழக இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு பங்கேற்று, ஆதீனத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீகுருஞானசம்பந்தர் அருள் நிலையை விருந்தினர் மாளிகையை திறந்து வைத்தார். தொடர்ந்து, தருமையாதீனம் சிவஸருள் இயக்கத்தின் சார்பில் 27,000 மரக்கன்றுகள் நடும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் தருமபுரம் ஆதீனம் கூறியது: வரும் ஆகஸ்ட்டில் நடைபெற உள்ள தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியின் பவளவிழா நிறைவு விழாவுக்கு முதல்வரை அழைத்து வர அறநிலையத் துறை அமைச்சரிடம் கூறியுள்ளோம். மரபுவழியை யைப் பின்பற்றும் ஆதீனங்களுடன் தமிழக அரசு இணக்கமாக செயல்படுகிறது என்றார்.

▲ தருமபுரம் ஆதீன தேவார பாடசாலையில் நேற்று மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார் அமைச்சர் பி.கே.சேகர்பாபு.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியது: தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் பவளவிழாவில் முதல்வர் பங்கேற்பது குறித்த ஆதீனத்தின் விருப்பத்தை முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்வேன். தருமபுரம் ஆதீனத்துக்கு உட்பட்ட 27 கோயில்களில், திமுக ஆட்சியில் 18 கோயில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, திருப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

சிதம்பரம் நடராஜர் கோயில் கனகசபை விவகாரத்தில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதையே தமிழக அரசு அமல்படுத்தியது. அக்கோயிலில் புகார்கள் குறித்து ஆய்வு செய்யவே அறநிலையத் துறை சார்பில் கடிதம் அனுப்பி உள்ளோம். அந்தக் கோயிலை அறநிலையத் துறை ஏற்றுக்கொள்ளும் திட்டம் எதுவும் இல்லை.

பொதுக் கோயில்களில் புகார்கள் வந்தால், அதை விசாரிக்க அறநிலையத் துறைக்கு உரிமை உண்டு. சட்டத்துக்குப் புறம்பான செயல்கள், புகார்கள் இருந்தால்தான் அந்தக் கோயில்களை குறித்து விசாரணை நடத்துவோம் என்றார்.

முன்னதாக, கல்லூரிச் செயலர் இரா. செல்வநாயகம் வரவேற்றார். நிகழ்ச்சியில், எம்.எல்.ஏக்கள் நீலேஷா எம்.முருகன், எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜகுமார், முன்னாள் எம்.எல்.ஏ ஜெகவீர பாண்டியன், நகராட்சித் தலைவர் என். செல்வராஜ், ஆதீன தலைமை கண்காணிப்பாளர் சி.மணி, பாடசாலை நிர்வாகச் செயலர் குரு.சம்பத்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பனியன் நிறுவன உரிமையாளரிடம் தொழில்ரீதியாக

ரூ.1.21 கோடி மோசடி செய்ததாக புகார் பல்லடம் நகர அதிமுக செயலாளர் கைது

■ திருப்பூர்

கருரை சேர்ந்த பனியன் ஏற்றுமதி நிறுவன உரிமையாளரிடம் ரூ.1.21 கோடி மதிப்பிலான நூலை பெற்று மோசடி செய்ததாக பல்லடம் நகர அதிமுக செயலாளர் ராமமூர்த்தியை, திருப்பூர் மாவட்ட குற்றப் பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

▲ ராமமூர்த்தி

கரூர் மாவட்டம் மண்மங்கலம் வட்டம் செம்மடையைச் சேர்ந்தவர் அசோக் ராம்குமார் (40). பனியன் ஏற்றுமதி நிறுவனம் நடத்தி வருகிறார். இவருடன், கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக வர்த்தகரீதியாக பல்லடத்தை சேர்ந்த ராமமூர்த்தி தொடர்பில் இருந்து வந்தார். அசோக் ராம்குமார் நூலை அனுப்பினால், அதனை துணியாக மாற்றி அனுப்பும் நிட்டிங் நிறுவனத்தை ராமமூர்த்தி நடத்தி வந்தார்.

கடந்த ஆண்டு ராமமூர்த்திக்கு அனுப்பிய ஒரு லட்சம் கிலோ நூலை துணியாக மாற்றி அனுப்பாமல், தன்னை மோசடி செய்துவிட்டதாக திருப்பூர் மாவட்ட குற்றப் பிரிவு போலீஸாரிடம் அசோக் குமார் புகார் அளித்தார். அதில், நூலின் மதிப்பு ரூ.1 கோடியே 21 லட்சத்து 66 ஆயிரம். இதுதொடர்பாக கேட்டால் என்னை மிரட்டுகிறார். அவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து, எனது நூலை மீட்டுத் தர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

புகாரின்பேரில் ராமமூர்த்தி மீதும், அவரது நிறுவன கணக்காளர் சங்கர் கணேஷ் (41) மீதும், மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார், கடந்த 30-ம் தேதி வழக்கு பதிந்தனர். இதைத் தொடர்ந்து பல்லடம் நகர அதிமுக செயலாளரான ராமமூர்த்தியை, குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

தேசிய உயரம் தாண்டுதல் போட்டியில்

வ.உ.சி. கல்லூரி மாணவிக்கு வெண்கலப் பதக்கம்

■ தூத்துக்குடி

தேசிய அளவிலான உயரம் தாண்டுதல் போட்டியில் தூத்துக்குடி வஉசி கல்லூரி மாணவி சஹறானா வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

பெடரேஷன் கோப்பைக்கான 20 வயதுக்கு உட்பட்ட 20-வது தேசிய அளவிலான போட்டிகள் குஜராத்தில் உள்ள சோட்டாபாய் விளையாட்டு மைதானத்தில் நடந்தது. இதில், உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்ற தூத்துக்குடி வஉசி கல்லூரி ஆங்கில இலக்கியம் முதலாமாண்டு மாணவி சஹறானா 1.64 மீட்டர் உயரம் தாண்டி இந்திய அளவில் மூன்றாமிடம் பிடித்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

▲ மாணவி சஹறானா

சஹறானாவை தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு அதிகாரி பேட்ரிக், மாவட்ட தடகளச் செயலாளர் பழனிச்சாமி, வஉசி கல்லூரி செயலாளர் ஏபிசி சொக்கலிங்கம், கல்லூரி முதல்வர் சொ.வீரபாகு, உடற்கல்வி இயக்குநர் சிவஞானம் ஆகியோர் பாராட்டினர்.

அதிமுக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க பாஜக வலியுறுத்தல்

■ அரியலூர்

பாஜக மாநில துணைத் தலைவர் சுருப்பு முருகானந்தம் அரியலூரில் நேற்று கூறியது:

பாஜகவை விமர்சனம் செய்யும் அதிமுக நிர்வாகிகள் மீது அந்தக் கட்சியின் தலைமை கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இருகட்சியினரும், ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்தால், அது திமுகவுக்குச் சாதகமாக அமைந்துவிடும். ஆக்கபூர்வமான எதிர்க்கட்சி எது என்பதைவிட, ஆளுங்கட்சியின் குறைகளை கட்டிக்காட்டுவதில் பாஜக தனித்து நிற்கிறது. அவ்வாறு அதிமுக செயல்படவில்லை என்றால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல என்றார்.

visalam.biz | tamilnews.com | tamil.co.in

உலகின் தட்பவெப்பநிலை, இயற்கை பேரிடர்களை கண்டறிய

இஸ்ரோ, நாசா இணைந்து உருவாக்கும் செயற்கைக்கோள்

● இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன் தகவல்

■ ராமநாதபுரம்

உலகின் தட்பவெப்பநிலை, பூகம்பம் உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை துல்லியமாகக் கண்டறியும் வகையில் இஸ்ரோ, நாசா ஆகியவை இணைந்து நிஸார் என்ற செயற்கைக்கோளை உருவாக்கி வருவதாக இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன் தெரிவித்தார்.

ராமேசுவரத்தில் உள்ள மறைந்த முன்னாள் குடியரசுகத் தலைவர் அப்துல் கலாம் வீட்டுக்கு, இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன் நேற்று வருகை தந்தார். அப்துல் கலாமின் உறவினர்களை அவர் சந்தித்து பேசினார்.

அப்போது அப்துல் கலாமின் அண்ணன் பேரன் ஷேக் சலீம், கலாமின் அண்ணன் மகள் நஸீமா மரைக்காயர் ஆகியோர் அவரை வரவேற்று நூல் வழங்கினர். பின்னர் கலாமின் இல்லத்தில் பள்ளி மாணவ, மாணவிகளின் பல் வேறு கேள்விகளுக்கு சிவன் பதிலளித்து கலந்துரையாடினார்.

▲ ராமேசுவரத்தில் உள்ள முன்னாள் குடியரசுகத் தலைவர் கலாமின் இல்லத்தில் மாணவர்களுடன் கலந்துரையாடிய இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமும் (இஸ்ரோவும்), நாசாவும் சேர்ந்து நிஸார் (என்ஐஸ்ஏஆர்) என்ற செயற்கைக்கோளை உருவாக்கி வருகின்றன. இந்த செயற்கைக்கோள் இந்தியாவில் இருந்து ஏவப்படும்.

அது ஏவப்பட்ட பிறகு உலகத்தில் உள்ள தட்பவெப்ப நிலை, பூகம்பம் உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை முன்கூட்டியே அறிய முடியும். மனிதர்களை சந்திரனுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தில், ககன்யான் விண்கலம் தற்போது சோதனை செய்யப்பட்டு வருகிறது. முதன் முதலில் மனிதர்கள் இல்லாமல் இரண்டு முறை சோதனை செய்யப்பட்ட பின்னர் மனிதர்கள் அனுப்பப்படக் உள்ளனர்.

குலசேகரப்பட்டினம் ஏவுதளம்

குலசேகரப்பட்டினத்தில் ஏவுதளம் அமையக உள்ளதற்கு பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 2,200 ஏக்கர் நிலம் தேவைப்படுவதாக இஸ்ரோ கேட்டதை அடுத்து முதல் கட்டமாக 1,850 ஏக்கர் இடத்தை தமிழக அரசு கையகப்படுத்திக் கொடுத்துள்ளது. முழுமையாக இடங்கள் கையகப் படுத்திய பிறகு அங்கு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் எனக் கூறினார்.

முன்னதாக அவர் ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் தரிசனம் செய்தார்.

● செய்தி: கலைஞரின் கனவுகளை ஸ்டாலின் நிறைவேற்றுவார்!
– இளையராஜா

பஞ்ச்: பிரதமர் மோடியைப் புகழ்ந்தபோது, இளையராஜாதான் கவர்னராக ஆசைப்படுறாங்கு சொன்னவங்க எல்லாம் வரிசையில வாங்க!
– ஆ.நல்லமுத்து, கோவில்பட்டி.

● செய்தி: மு.க.ஸ்டாலின் ஆட்சி மகிழ்ச்சியைத் தருகிறது!
– கே.எஸ்.அழகிரி

பஞ்ச்: தொகுதிப் பங்கீடு சமயத்துலதான் அழுகை அழுகையா வருதோ?
– கா.மு.ஷ்பாரூக், சென்னை.

▲ வாசகர்களே...
கருந்துாட் சிந்திரம் போலவே, இதுவும் உங்கள் கனம்தான். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கே 'நறுக்' செய்தி வரிகளோடு சேர்த்து அனுப்புங்கள். பிரசுரமாகும் உங்கள் 'பஞ்ச்'களுக்குப் பரிசு ரூ.100.

நெல்லை பணகுடி அருகே காருக்குள் மூச்சுத்திணறி 3 குழந்தைகள் மரணம்

■ திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் பணகுடி அருகே காருக்குள் விளையாடிக் கொண்டிருந்த 3 குழந்தைகள், கதவைத் திறக்க தெரியாமல் மூச்சுத்திணறி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பணகுடி அருகே லெப்பைகுடியிருப்பு பாலர்பள்ளி தெருவைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் தனது காரை வீட்டு வாயிலில் நிறுத்தியிருந்தார். இவரது தம்பி நாகராஜின் குழந்தைகள் நித்திஷ் (7), நிதிஷா (5), சுதாகர் என்பவரின் மகன் கபிரஞ்சு (4) ஆகிய மூவரும், நேற்று பிற்பகல் 2 மணியளவில் மணிகண்டனின் காருக்குள் விளையாடிக் கொண்டிருந்தனர். குழந்தைகளுக்கு கதவைத் திறக்க தெரியவில்லை. இதனால், மூச்சுத்திணறி குழந்தைகள் மயங்கி விழுந்துள்ளனர்.

நீண்ட நேரமாக குழந்தைகளை காணாமல் பெற்றோரும், அக்கம்பக்கத்தினரும் தேடினர். அப்போது, காருக்குள் 3 பேரும் மயங்கிக் கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். மூவரையும் மீட்டு பணகுடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், 3 பேரும் ஏற்கெனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து பணகுடி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

மேட்டூர் அணை நீர்மட்டம் 115.10 அடியானது

■ சேலம்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 3,420 கனஅடியாக குறைந்தது. அணையின் நீர்மட்டம் 115.10 அடியாக சரிந்தது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த கோடை மழை காரணமாக மே மாதத்தில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. தற்போது, மழை குறைந்து நீர்வரத்து குறைந்து வருகிறது.

அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 3,599 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 3,420 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு குறுவை சாகுபடிக்காக விநாடிக்கு 8,000 கனஅடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. நீர்வரத்தைவிட திறப்பு அதிகமாக இருப்பதால், நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. நேற்று முன் தினம் 115.38 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 115.10 அடியாக குறைந்தது. நீர் இருப்பு 85.86 டிஎம்சி-யாக உள்ளது.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : "கதவுண்ணா", எண்.12, காந்தி நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
இணையதளம் : www.sundaramclayton.com; தொலைபேசி : (044) 28332115, தொலைநகல் : (044) 28332113
மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com; CIN : L35999TN1962PLC004792

60வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு

கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியின் அறிவுரைப்படி கொவிட்-19ப்பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் கம்பெனிகள் சட்டம் 2013-ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜர் ஆகாமல் காணொளி கூட்டி (VC) மற்றும் இரு அங்கீகரிக்கப்பட்ட ஓலி / ஒளி சாதித வழிமுறைகள் ("OAVM") மூலமாக கம்பெனியின் 60-வது வருடாந்திர பொதுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை, ஜூன் 28, 2022, அன்று காலை 10.15 மணிக்கு (இந்திய நேரப்படி) பொதுக்கூட்டம் மற்றும் மே 6, 2022 அறிவிப்பில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் (www.sundaram-clayton.com) நிஸை(ஐ லிமிடெட் (www.nseindia.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் (www.nseindia.com) இணையதளத்திலும் தேவையான செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) (தொலைவழி மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவரி) இணையதளத்திலும் (www.evoting.nsdl.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட கற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் போர்ட் / டெபாசிட்டரிகளிடமோ தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுக்கூட்டம் மற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை 2021-22 மின்னஞ்சல் மூலம் ஜூன் 4, 2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட நாளான ஜூன் 21, 2022 அன்று வங்கித் வரவோலை / டீமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் 60-வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றிய அறிவிப்பில் உள்ள சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்களை ஒழித்தான தீர்மானங்களுக்கு மின்னணு முறைமையில் அல்லது NSDL (தொலைவழியில் மின்னணு வாக்களிப்பு) மூலம் தங்கள் வாக்கை பதிவு செய்யலாம்.

அரைவைத்து அங்கீகரிக்கப்பட்டுள்ள இதன் மூலம் அதிகிக்கப்பட்டுவது மண்ணில்வெல்லாம்;

1. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சாதாரண மற்றும் சிறப்புத் வர்த்தகங்கள் தொலைவழி மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு மூலம் செயலாக்கப்படும்.
2. மின்னணு மூலம் வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் நாள் மற்றும் நேரம்: சனிக்கிழமை, ஜூன் 25, 2022 காலை 9 மணி (இந்திய நேரப்படி).
3. மின்னணு மூலம் வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: திங்கட்கிழமை, ஜூன் 27, 2022 மாலை 5 மணி (இந்திய நேரப்படி).
4. மின்னணு மூலம் வாக்குப்பதிவு திங்கட்கிழமை, ஜூன் 27, 2022 மாலை 5 மணிக்கு (இந்திய நேரப்படி) மேல் அனுமதிக்கப்பட மாட்டாது.
5. மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குப்பின் தொலைவில் இருந்து வாக்களிக்க இயலாது. அங்கத்தினர்கள் தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்தப்பின் மின்னணு அதை மாற்ற முடியாது.
6. தொலைவழி மின்னணு வாக்குப்பதிவு மூலமாக அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு மூலமாக வாக்களிக்கும் வாக்களவர் பட்டியல் ஜூன் 21, 2022 அன்று வரையறுக்கப்படும்.
7. எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டபின் வரையறுக்கப்பட்ட தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், லாகுஇலாபமா என்று மின்னஞ்சல் அல்லது evoting@nsdl.com என்ற இணையதளங்களாக evoting@integratedindia.in விண்ணப்பம் செய்து உள்ளுணவுடன் அனுப்பினால் கொண்ட (லாகுஐடி) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டும் பெறலாம். இதுமட்டுமன்றி NSDL க்கு தொலைவழியில் இருந்து வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், அவர்கள் தங்கள் தற்போதைய அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை மாற்றியுத்தி வாக்களிக்கலாம்.
8. தொலைவழியில் இருந்து மின்னணு முறைமையில் வாக்களிக்க இயலாத அங்கத்தினர்கள் மின்னணு மூலமாக ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. தொலைவழியில் இருந்து மின்னணு முறைமையில் வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.
10. வரையறுக்கப்பட்ட நாளன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகள் பதிவேட்டில் உள்ள அங்கத்தினர்கள் மட்டுமே தொலைவழியில் இருந்து மின்னணு முறைமையில் அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு முறைமையில் வாக்களிக்க முடியும்.
11. Mr. B. சந்தோர் & அசோஸியேட்ஸ், தெஜெஸ் முறை கம்பெனி செயலாளர் அலங்கலை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர மற்றும் பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு ஆகியவை தேர்வையான மற்றும் ஒளிவுமறைவாக இல்லாத முறையில் நடைபெற ஆய்வாளராக கம்பெனியால் நியமிக்கப்பட்டுள்ளார்.
12. வாக்களிக்கும் முறையில் ஏதேனும் சந்தேகங்களுக்கு உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவழியில் இருந்து வாக்களிக்கும் முறை மற்றிய சிறு குறிப்பேடு ஆகிய பகுதிகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்தில்(கீழுள்ள பகுதியிற்கும் செல்லு தெரிந்து கொள்ளலாம் அல்லது 1800-1020-990 மற்றும் 1800-224-430 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மின் வாக்குப்பதிவு மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அனுப்பலாம் Ms. பல்லவி மாதுரே, மேலாளர் – NSDL மின்னஞ்சல் : evoting@nsdl.co.in அவர்களிடம் மேற்குறிப்பிட்ட முகவரியில் இருந்து தெரிந்து கொள்ளவும்.
13. கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாது உறுப்பினர்கள் கீழுக்கண்ட ஆவணங்களின் நகல்களை corpsec@integratedindia.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வருட.ஈறிதா பொதுக்கூட்ட அறிவிப்பை பெற்றால், வருட.ஈறிதா அறிக்கை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வருட.ஈறிதா பொதுக்கூட்டத்தில் இணையதளத்தான விவரங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். உங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம், பங்கு சான்றுகளின் நகல் (முன் மற்றும் பின் பக்கம்), வரி சான்றுகளிக்கப்பட்டு வரிகளை செய்யப்பட்ட பான் மற்றும் கம்பெனியிடம் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கான ஒட்டுண்ண உரிமை / பணம்பெயர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றின் சேதுஐ ஒன்றை சுயசான்றுமிக்கப்பட்டு, விரிவாக செய்யப்பட்ட நகலை இணைக்க வேண்டும்.
14. கம்பெனியிடம் ஏற்கனவே தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அவற்றை பதிவு செய்வது குறித்து கம்பெனியானது மே 10, 2022 அன்று ஒரு அறிவிப்பை வெளியிட்டது.
15. சரியான தேதிக்கில் தகவல்களை பெற மின்னஞ்சல் முகவரியை கம்பெனி மற்றும் டெபாசிட்டரி பார்ட்டிசிபெண்ட்டுகளுடன் பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குநர் குரு ஆனாண்மியாக,
R. ராஜா சிதரைஸ்,
கம்பெனி செயலாளர்

சென்னை
ஜூன் 4, 2022